17.10.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.107/2018</u>

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயசந்திரன் | | |
| த/பெ | மடத்திகவுண்டர் | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 68/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு கண்டம்பாக்கத்தில் ஏழுமலை மகன்கன் சீனுவாசன், ஜெயபால், முருகன், ஆறுமுகம் ஆகியோர்களை எனக்கு தெரியும். அதில் ஆறுமுகம் என்பவர் வழக்கறிஞராக இருந்தார். அவர் பா.ம.க, கட்சியிலும் இருந்தார். அவர் ஊரில் எதாவது பிரச்சனை இருந்தால் அதை தட்டி கேட்பார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கு தொடர்பாக எதுவும் தெரியாது. எனக்கு முருகன் எப்படி இறந்தார் என்று தெரியாது. அந்த சமயத்தில் நான் வெளி ஊரில் இருந்தேன். இந்த வழக்கு குறித்து என்னை காவல் துறையினர் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

காவல் துறை விசாரணையில் ஆறுமுகம் வழக்கறிஞர் ஊரில் பிரச்சனை ஏற்பட்டால் தட்டி கேட்பார் என்றும், அதுபோன்று எங்கள் கிராமத்தில் விஸ்வநாதன் மகன் ராதாகிருஷ்ணன் என்பவர் போலீசுக்கு தெரியாமல் திருட்டு தனமாக சாராயம் விற்றுவந்ததால் அதனை ஆறுமுகம் போலீசுக்கு தகவல் சொன்னதால் ஆஜர் 1ம் எதிரிக்கும் ஆறுமுகத்திற்கும் விரோதம்

ஏற்பட்டு 1ம் எதிரி தனது கூட்டாளிகளோடு ஆறுமுகம் வழக்கறிஞரை கொலை செய்து விட்டார் என்றும், அந்த கொலை செய்த நேரத்தில் ஆறுமுகம் சகோதரர் முருகன் நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சி ஆவார் என்றும், ஆறுமுகம் கொலை வழக்கின் விசாரணையின் போது ஆஜர் 1ம் எதிரி ஊர் மக்கள் மற்றும் தனியாகவும், முருகனிடம் சாட்சி சொல்ல கூடாது என்று அறிவுறுத்தி வந்த நிலையில் முருகன் ஒப்புக்கொள்ளததால் முருகனை தீர்த்துகட்ட தீராத விரோதம் கொண்டு 29.08.2014ந் தேதி அதிகாலையில் என்னமோ சத்தம் கேட்டு வெளியில் ஓடி வந்து பார்த்தபோது அப்போது மணி அதிகாலை 3.30 மணி இருக்கும் என்றும் முருகன் வீட்டின் முன்பு எறிந்துக்கொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தை பார்த்து பார்த்த போது எங்கள் ஊரைச் சேர்ந்த விஸ்வநாதன் மகன் ராதாகிருஷ்ணன், வீரபத்திரன் மகன் உலகநாதன், ராஜேந்திரன் மகன் ரகு, குணசேகரன் மகன்கன் சத்தியசீலன், பிரதாப், குப்பன் மகன்கன் அன்பரசன், புகழேந்தி, தண்டபாணி மகன் அசோக்குமார், கணேசன் மகன் சிலம்பரசன், கோபாலகிருஷ்ணன், லோகநாதன் மகன் சிவக்குமார், விநாயகமூர்த்தி ஆகியோர்கள் கும்பலாக கத்தி, தடி, வைத்துக்கொண்டு வீட்டின் வெளி திண்ணையில் படுத்திருந்த முருகனை சூழ்ந்து கொண்டு முத்தையன் மகன் முருகன், ராஜேந்திரன் மனைவி ஜெயக்கொடி ஆகியோர் என்னுடன் இருந்து பார்த்தார்கள் என்றும், முருகன் கூரை வீட்டின் மறைவில் முருகன் அண்ணன் சீனுவாசன் மறைந்து இருந்து பார்த்தார் என்றும், முருகன் மனைவி வீரம்மாள் எதிரிகளை பார்த்து ஐயோ அட பாவிகளா இங்கு எங்கே வந்தீர்கள் என்று சத்தம் போட்டார் என்றும் அதற்கு 1ம் எதிரி ராதாகிருஷ்ணன் எங்களுக்கு எதிராக உன் புருசன் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல போறான் என்று முருகனை அசையவிடாமல் எதிரிகள் அன்பரசு, முருகன் தலையையும், சத்தியசீலன், புகழேந்தி கால்களையும், கோபாலகிருஷ்ணன் வயிற்றின் மீது உட்கார்ந்து கொண்டு கைகளை பிடித்துக்கொண்டார்கள் என்றும், பிரதாப், சிலம்பரசன், அசோக்குமார் இவர்கள் கொடுவா கத்தியுடன், சிவக்குமார், வினாயகமூர்த்தி தடிகளுடன் சுற்றி நின்றுக்கொண்டு அவனை விடாதீங்கடா என்றும், வெட்டுங்கடா, வெட்டுங்கடா என்று மற்றவர்களை தூண்டி விட்டார்கள் என்றும், உடனே ராதாகிருஷ்ணன், வீரபத்திரன், ரகு மூவரும் கையில் வைத்திருந்த கொடுவாள் கத்தியால் முருகனை பார்த்து தேவிடியா மகனே என்று அசிங்கமா திட்டி நீ உயிருடன் இருந்ததால் தானே சாட்சி சொல்வாய் அதனால் நீ ஒழிந்து போடா என்று சொல்லி மூவரும், முருகன் கழுத்தில் மாறி மாறி வெட்டினார்கள் என்றும்,. ஊரில்

உள்ளவர்கள் சத்தம் கேட்டு ஓடி வரவே எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்றும், இந்த சம்பவம் குறித்து முருகனின் மனைவி வீரம்மாள் புகார் கொடுத்தார் என்றும் காவல் துறை விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் சொந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை**

மறுவிசாரணை

**இல்லை**